# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

**மானியக் கோரிக்கை எண்–49**

**2012 -2013**

என்.ஆர்.சிவபதி
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு
**2012**

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண்–49

## கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013


| படலம் எண். | பொருளடக்கம் | பக்கம் எண். |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | 4 |
| 2. | விளையாட்டுத் திறன் கண்டெடுத்தல் | 13 |
| 3. | விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல் | 18 |
| 4. | பயிற்சித் திட்டங்கள் | 30 |
| 5. | விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் | 34 |
| 6. | உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத்தொகைகள் | 44 |
| 7. | தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகம் | 52 |
| 8. | இளைஞர் நலத் திட்டங்கள் | 53 |
| 9. | தேசிய மாணவர் படை | 56 |
| 10. | நாட்டு நலப் பணித் திட்டம் | 59 |

# <u>கொள்கை விளக்கக் குறிப்பு 2012–13</u>

## <u>முன்னுரை</u>

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மனித வளத்தை மேம்படுத்திட நான்கு முக்கிய உத்திகளில் கவனம் செலுத்துகிறது. அதாவது, பரவலாக்கல் மற்றும் விளையாட்டில் ஒட்டு மொத்த பங்கேற்பு செய்தல், விளையாட்டின் உயர்நிலைக்கு செல்ல ஊக்குவித்தல், இளைஞர்களிடையே நற்பண்பு மற்றும் ஆரோக்கியமான குணநலன்களை வளர்த்தல் மற்றும் இளைஞர்களிடையே தொண்டு மனப்பான்மையை வலுவூட்டுவதன் மூலம் அவர்களிடையே தனி மனித ஒழுக்கம் மற்றும் வளர்ச்சிப் பாதை என்ற இலக்கை நோக்கி அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்கச் செய்தல்.

விளையாட்டு, தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித்திட்டம் மற்றும் நேரு யுவ கேந்திரா ஆகியவற்றின் செயல்பாடுகள், இளைஞர்கள் பொறுப்புமிக்க குடிமகன்களாக மலருவதற்குத் தேவையான அடிப்படைத் திறன் மற்றும் நற்குணங்களை வழங்கி அவர்களிடையே சாதனை உணர்வு, நாட்டுப் பற்று மற்றும் தேசப் பெருமையை உயர்த்த வழிவகுக்கிறது.



தரமான கட்டமைப்பு வசதி மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட பயிற்சி அளிப்பதன் மூலம் மாநிலத்தின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் திறமைகள் மேம்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளை கண்டறிந்து அவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புகள் வழங்க தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் சம்பந்தமான அனைத்து கொள்கை முடிவுகளையும் மாநிலத்தின் உயர் விளையாட்டு அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் அரசு செயல்படுத்தி வருகிறது.

நாட்டு நலப்பணித் திட்டத்தில் நாட்டிலேயே அதிகமான தொண்டர்களைக் கொண்டிருப்பது தமிழ்நாடே ஆகும் (3,70,018 நபர்கள்). மேலும், மாநிலத்தில் 98,790 மாணவ மாணவியர் தேசிய மாணவர் படையில் உள்ளனர்.

இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வளர்ச்சிக்கு “மிகப்பெரிய உத்வேகம்“ கொடுத்துள்ளார்கள்.

## 2012–2013 ஆம் ஆண்டின்
## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான
## நிதி ஒதுக்கீடு

**2012–2013 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 49–ன் கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.10,348.42 இலட்சம் ஆகும். இதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.6,762.24 இலட்சமும், தேசிய மாணவர் படைக்கு ரூ.3,510.54 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



## படலம் – 1

### 1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் சக்தியையும், ஆர்வத்தினையும் ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு, அரசாணை எண்.641, கல்வி (ஒய்1) துறை, நாள்.18.7.92–ல் அதற்கு முன்பு இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி கழகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ‘‘தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்’’ என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டு குழும அமைப்பிற்கு இணையானதாக உருவாக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தமிழகத்தில் விளையாட்டுத் துறையின் தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

### 1.2 குறிக்கோள்களும், இலக்குகளும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. தமிழ்நாட்டில் விளையாட்டுகளின் தரத்தினை உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்கி

அதனை முறையாக செயல்படுத்தி தமிழ் நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்துதல்.

2. தற்சமயம் நடை முறையிலுள்ள விளையாட்டுகளுக்கான திட்டங்களை மேம்படுத்தும் பொருட்டும் விளையாட்டின் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடனும், இந்திய அரசு மற்றும் பிற நிறுவனங்களின் திட்டங்களின் மூலம் செயல்படுத்துதல்.
3. விளையாட்டு முன்னேற்றம் மற்றும் விளையாட்டு சார்ந்த மருத்துவம், உயிர் வேதியியல், உளவியல் மற்றும் இணையான விஞ்ஞான வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகளை ஊக்குவித்து, ஆதரவு தந்து, உற்சாகமளித்து செயல்படுத்துதல்.
4. தமிழ் நாட்டில் விளையாட்டுக் கட்டுமானத்திற்கான இடத்தினை கையகப் படுத்தி, பராமரித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் மற்றும் விளையாட்டு வசதிகள் மற்றும் அது சார்பான கட்டிடங்கள் விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு அரங்கங்கள், நிலங்கள் ஆகியவைகளை உபயோகித்தல்.



5. திறமைமிக்க விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.
6. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளையும், ஊக்க உதவித் தொகைகளையும் வழங்குதல்.
7. பெருமளவிலான மக்களிடம் ஆரோக்கியமான உணர்வை வளர்க்கவும், முறையான பயிற்சி மேற்கொண்டு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செய்து அதிகப்படியான விளையாட்டுக்களில் கலந்து கொண்டு தமிழகத்தை வலிமைமிக்க மாநிலமாக்குதல்.

**1.3** தமிழ்நாடு, கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

## 1.4 விளையாட்டில் தமிழ்நாடு உன்னத நிலையை அடைவதற்கான உத்திகள்

விளையாட்டில் வெற்றி பெற்றுள்ள பெரும்பாலான நாடுகள் கீழிலிருந்து மேல் நோக்கி செல்லும் பிரமிடு உத்தியினை கடைபிடித்து வருகின்றன. தமிழ்நாடு, தெளிவாக வரையறுக்கப்பட்ட நீண்ட கால, ஐந்து பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசை, செயல் திட்டத்தினை கடைபிடித்து வருகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை–1, அடித்தள திறன் கொண்ட அளவிலும், நிலை–5, அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும் பொருட்டு பிரமிடு முறையிலான வரைபடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.






இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் விளையாட்டுத் திறமை மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 1.5 நிலை I : பெருவாரியான மற்றும் பரவலான பங்கேற்பு

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8–வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உடல் திறனறியும் சோதனை நடத்தப்படுகிறது. இதிலிருந்து நல்ல திறனுள்ளவர்கள்

கண்டறியப்பட்டு அடுத்த நிலை பங்கேற்பிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

விளையாட்டு கட்டமைப்புகள் கொண்ட “பைக்கா” மையம் அமைக்கப்பட்டு, விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள வட்டார அளவிலான “பைக்கா” விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**1.6 நிலை 2 : மாவட்ட அளவு**

ஏற்கனவே திருப்பூர் தவிர அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 400 மீ ஓடுதளப் பாதை கொண்ட விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 20 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த வசதிகள் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் அமைக்கப்படும். மாவட்ட விளையாட்டு சங்கங்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் கல்வித் துறை மூலம் மாவட்ட அளவிலான போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

**1.7 நிலை 3 : மாநில அளவு**

மாநில அளவில் உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே சென்னை, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் 400 மீ



செயற்கை இழை ஓடுதளம் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை, திருச்சி மற்றும் திருநெல்வேலியில் செயற்கை இழை ஆக்கி மைதானம் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை, கடலூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உறாக்கிப் போட்டிகள் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் தொடர் போட்டி முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர, Knock-out அடிப்படையில் தடகளம், நீச்சல் உட்பட எட்டு விளையாட்டுகளுக்கு மாநிலப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதுபோன்று இந்த ஆண்டு முதல், மாநில அளவிலான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் “முதலமைச்சர் கோப்பைக்கான” போட்டிகள் சிறப்பாக நடைபெற உள்ளன.

இது தவிர, மாநில விளையாட்டுச் சங்கங்கள் ஆண்டுதோறும் மாநிலப் போட்டிகள் மற்றும் தேசியப் போட்டிகள் நடத்திட நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

## 1.8 நிலை 4 & நிலை 5: தேசிய அளவு / பன்னாட்டு அளவு

கீழ்மட்ட அளவில் எடுக்கும் அனைத்து முயற்சிகளின் பலன்கள் தேசிய/பன்னாட்டு வெற்றிகளில் முழுமை பெறும். தமிழக வீரர்கள் இத்தகைய வெற்றிகளில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, வாலிபால், கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபடி, வாள்வீச்சு, மேசைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் தமிழ்நாட்டு வீரர்கள் தேசிய அணிகளில் பங்கேற்றுள்ளனர். உலகத் தரமுள்ள விளையாட்டு வசதிகள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே சிறப்பான சாதனை புரிந்த வீரர்களின் திறமையை மேலும் வளர்ப்பதற்கு “சிறப்பு விளையாட்டு விடுதிகள்'' நடத்தப்பட்டு வருகின்றன. வீராங்கனைகளுக்கென “சிறப்பு விளையாட்டு விடுதிகள்” இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்.

தேசிய, பன்னாட்டு அளவு போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்தவும், பிற நாடுகளில் நடைபெறும் இப்போட்டிகளில் தமிழக வீரர்கள் கலந்து கொள்ளவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.



தேசிய, மற்றும் பன்னாட்டு அளவில் சாதனை புரிவோருக்கு உயரிய ஊக்கத் தொகையினை தமிழக அரசு வழங்குகிறது.

## படலம்–2

## விளையாட்டுத் திறன் கண்டெடுத்தல்

விளையாட்டுத் திறன் கண்டறிய பின்வரும் மூன்று செயல் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

1. உலக அளவிலான திறமை மிக்கவர்களை கண்டறியும் திட்டம்
2. விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு

### 2.1 உலக அளவிலான திறமை மிக்கவர்களைக் கண்டறியும் திட்டம் (4 அடுக்கு)

### 2.1.1 பள்ளிகளில் உடற் திறன் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கு விளையாட்டுத் திறன் அறிக்கை அட்டை வழங்குதல்

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8–ம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு வழிகாட்டுதலின்படி, உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர் / சிறுமியர்களுக்கு விளையாட்டுத் திறன் அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து கொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடிகிறது.

### 2.1. 2 கல்வி மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களை கண்டெடுத்தல்

தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தடகளம் மற்றும் இதர விளையாட்டுக்களில் போட்டிகளை நடத்துகிறது. இந்தப் போட்டிகளில், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 2500 முதல் 3000 சிறுவர்/சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில முழுவதும் ஒரு லட்சம் பேர் கலந்து கொண்டு வருகிறார்கள். கல்வி மாவட்டங்கள் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மண்டல அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க, கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு

மண்டலத்திலும் 600 சிறுவர்/சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில அளவில் 5400 பேர் கலந்து கொள்கின்றனர்.

மண்டல அளவில் நடத்தப்படும் போட்டிகளில் திறமை மிக்கவர்களைக் கண்டறிந்து கோடைக் காலத்தில் 15 நாட்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, இதில் திறன் மிக்கவர்களைக் கண்டறிந்து, சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு சிறப்புப் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இந்த அகாடமிகளில் 1200 மாணவ/ மாணவிகள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள்.

**2.2 <u>விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு (இரண்டு அடுக்கு)</u>**

விளையாட்டு விடுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் 7, 8, 9 மற்றும் 11வது வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவிகள் புதிதாக சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதற்குரிய தேர்வானது மாவட்ட அளவு மற்றும் மாநில அளவு தேர்வு என இரண்டு அடுக்கு முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

**2.3 <u>ஆண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு</u>**

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்தவர்களைக் கண்டறிந்து சிறப்பு



விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 200 முதல் 300 மாணவர்கள் கலந்து கொள்வர். இதில் 30–40 சிறந்த விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு விளையாட்டு விடுதிகளில் ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**2.4 <u>பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி</u>**

தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் தேர்வுப் போட்டிகள் நடத்தி அவர்களில் 60 சிறந்த விளையாட்டு வீராங்கனையரை தேர்ந்தெடுத்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சென்னை உள் விளையாட்டு அரங்கத்தில் நடத்தப்படவுள்ள பெண்களுக்கான சிறப்பு விடுதியில் அனுமதிக்கப்படுவார்கள்.

**2.5 <u>முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான தேர்வுப் போட்டிகள்</u>**

சிறந்த நிபுணர் குழுவினைக் கொண்டு மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தேர்வுப் போட்டிகள் நடத்தி விளையாட்டுக்களில் திறமை வாய்ந்த மற்றும் தகுதியுள்ள இளம் 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்

தேர்ந்தெடுக்கப்பட்டு முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் சேர்க்கப்படுவார்கள்.



## படலம்–3

## விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல்

விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்த ஏழு நிலைகளில் செயல்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன:

சிறப்பு அகாடமிகள்; விளையாட்டு விடுதிகள்; கல்லூரிகளில் இணை விளையாட்டு மையங்கள்; திறன் மேம்பாட்டு மையங்கள்; சிறப்பு மேம்பாட்டு மையங்கள்; பயிற்சி மையங்கள் மற்றும் சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்.

### 3.1 சிறப்பு அகாடமிகள்

கீழ்க்காணும் விளையாட்டுக்களில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன.

சென்னையில் கிரிக்கெட் அகாடமி, அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி, பெண்கள் கையுந்துபந்து அகாடமி, டைவிங் அகாடமி, ஆண்கள் வளைகோல் அகாடமி, பெண்கள் வளைகோல் அகாடமி, சந்திரா மேசைப்பந்து

அகாடமி, ஏ.கே.ஜி மேசைப்பந்து அகாடமி, டால்பின் நீச்சல் அகாடமி மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமியும், நாகப்பட்டிணத்தில் ஆண்கள் கால்பந்து அகாடமி, விருதுநகரில் எறிதல் அகாடமி, திருவண்ணாமலையில் குறுந்தூர ஓட்ட அகாடமி, உதகமண்டலத்தில் நீண்டதூர ஓட்ட அகாடமி, திண்டுக்கல்லில் சிறுமியர் கால்பந்து அகாடமி மற்றும் மதுரையில் எல்லிஸ் நகர் மேசைப்பந்து அகாடமியும் செயல்பட்டு வருகின்றன.

இந்த அகாடமிகளைச் சார்ந்த 1200 விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சத்துணவு, விளையாட்டுக் கருவிகள், காலணிகள் வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.



### 3.2.1 <u>விளையாட்டு விடுதிகள்</u>

பின்வரும் 12 விளையாட்டு விடுதிகள் (Sports Hostels) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

1. விளையாட்டு விடுதி, ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை – குத்துச்சண்டை, கால்பந்து மற்றும் வளைகோல்பந்து.
2. விளையாட்டு விடுதி, என்.எல்.சி. நெய்வேலி – தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து.
3. விளையாட்டு விடுதி, திருச்சிராப்பள்ளி – தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை.
4. விளையாட்டு விடுதி, மதுரை – தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல்பந்து.
5. விளையாட்டு விடுதி, திருநெல்வேலி – தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து, நீச்சல், குத்துச்சண்டை மற்றும் கூடைப்பந்து
6. மாணவியர் விளையாட்டு விடுதி, ஈரோடு – தடகளம், கையுந்துபந்து மற்றும் கால்பந்து
7. மாணவியர் விளையாட்டு விடுதி, பாரதி வித்யாபவன், ஈரோடு – கூடைப்பந்து
8. விளையாட்டு விடுதி, செல்வம் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் – தடகளம் மற்றும் வாள்சண்டை (ஆண் மற்றும் பெண்)
9. விளையாட்டு விடுதி, அரசு மேல்நிலைப்பள்ளி, புதூர், சென்னை – கிரிக்கெட்

10. மாணவியர் விளையாட்டு விடுதி, திருவண்ணாமலை – தடகளம், கைப்பந்து, வளைகோல்பந்து மற்றும் கூடைப்பந்து.
11. விளையாட்டு விடுதி, கிருஷ்ணகிரி – தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து.
12. மாணவியர் விளையாட்டு விடுதி, டென்னிஸ் விளையாட்டரங்கம், சென்னை – கையுந்துபந்து மற்றும் டென்னிஸ்.

இந்த விளையாட்டு விடுதிகளில் 1100 மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

### 3.2.2 புதிய விளையாட்டு விடுதிகள் ஆரம்பித்தல்

உலகத் திறனாய்வு திட்டத்தின் மூலமாக கண்டறியப்படும் திறன்வாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை பண்படுத்தி மேம்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் முதல் கட்டமாக கடலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஆண்களுக்கும், கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பெண்களுக்கும் விளையாட்டு விடுதிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்விளையாட்டு விடுதி



ஒவ்வொன்றிலும் 60 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சேர்க்கப்படுவர்.

### 3.2.3 சிறப்பு விளையாட்டு விடுதி (ஆண்கள்)

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்த, கல்லூரி மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. 80 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, கையுந்து பந்து மற்றும் டேக்வாண்டோ விளையாட்டுக்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 3.2.4 சிறப்பு விளையாட்டு விடுதி (பெண்கள்)

கல்லூரியில் பயிலும் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளின் திறனை மேம்படுத்துவதற்காக பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை பல்நோக்கு உள் விளையாட்டரங்கில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 60 சிறந்த பெண் வீராங்கனைகள் தடகளம், கால்பந்து

மற்றும் கையுந்துபந்து விளையாட்டுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டு சீருடை, தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக அளிக்கப்பட்டு அவர்கள் திறமை வளர்த்துக் கொள்வதற்காக சிறந்த பயற்சியும் வழங்கப்பட உள்ளன.

### 3.2.5 முதன்மை நிலை விளையாட்டு மையம்

விளையாட்டு விடுதிகள் மற்றும் சிறப்பு விளையாட்டு விடுதிகள் போன்று ஒரு “முதன்மை நிலை விளையாட்டு மையம்”, சிறந்த திறமை வாய்ந்த 10 முதல் 14 வயது வரையுள்ள 25 மாணவர்களுக்காகவும், 25 மாணவியர்களுக்காகவும் சென்னையில் அமைக்கப்படவுள்ளது. இவர்களுக்கு திட்டமிடப்பட்ட, விஞ்ஞான பூர்வமான பயிற்சிகள் வழங்கப்படும். இந்த மாணவ, மாணவியர்கள் சென்னையிலுள்ள சிறந்த பள்ளிகளில் படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான சிறந்த உணவு மற்றும் சிறந்த வசதிகள் வழங்கப்படும்.



## 3.3 கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றிவாகை சூடிப் பெருமை சேர்த்திடும் வகையில், வெவ்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களுடன் இணைந்து விளையாட்டு திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்களில் ஒவ்வொரு விளையாட்டிலும் திறன்படைத்த வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.15.00 இலட்சம் செலவழிக்கப்படுகிறது.

## 3.5 சிறப்பு மேம்பாட்டு மையம்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியில் ஒரு சிறப்பு பளுதூக்கு விளையாட்டு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு 30 விளையாட்டு வீரர்களுக்கும், 12 மாணவியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்விளையாட்டு வீரர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் டென்னிஸ் சிறப்பு பயிற்சி மையம் துவக்கப்பட்டு, மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளைச் சார்ந்த 10 சிறுவர், 10 சிறுமியர் நாள்தோறும் இலவசமாக டென்னிஸ் பயிற்சி பெற்று வருகின்றனர். அதே போன்று, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களிலும் டென்னிஸ் மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களில் எதிர்கால சேம்பியன்களை உருவாக்கிட ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி மையம் ஒன்று ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்திலும், நீச்சல் மையம் ஒன்று நாகப்பட்டினத்திலும் செயல்பட்டு வருகின்றன.

## 3.6 பயிற்சி மையங்கள்

### 3.6.1 நீச்சல் பயிலகம்

"நீந்தக் கற்றுக் கொள் பயிற்சிகள்" தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நீச்சல் குளங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்குபெறும் நபர்கள் 12 நாட்களில் தினமும் 1 மணி நேர பயிற்சியின் மூலம் நீச்சல் கற்றுக் கொள்கின்றனர்.

### 3.6.2 கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்கள்

கிராமங்களில் பிரபலமாக விளங்கும் விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி மையம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அங்கு விளையாட்டு மைதான வசதி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு விருப்பமுள்ள அனைவரும் தினமும் பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக கிராம விளையாட்டு



வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.7 சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்

20 வயதிற்கு உட்பட்டு ஏற்கனவே தேசிய அளவில் தங்கப் பதக்கம் வென்றவர்கள், சேம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு ஊட்டச்சத்து, உடை, விளையாட்டுக் கருவிகள் வாங்கவும், வெளிநாடு சென்று பயிற்சி பெறவும், வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. நடப்பாண்டில் 203 பேருக்கு ரூ.49.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 3.8 இறகுப்பந்து அகாடமி அமைத்தல்

இறகுப்பந்து விளையாட்டினை மாணவர்களிடையே பிரபலப்படுத்திடவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்ல தீவிர பயிற்சி அளிக்கும் வகையில் இறகுப்பந்து அகாடமிகள் ஐந்து இடங்களில் ரூபாய்

எழுபத்தைந்து இலட்சம் செலவில் அமைக்கப்படும். இங்கு பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு உணவு, போக்குவரத்துச் செலவினம், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடை ஆகியவைகள் வழங்கப்படும்.



## படலம்–4

## பயிற்சித் திட்டங்கள்

### 4.1 கோடைக்கால பயிற்சி முகாம்

ஒவ்வொரு ஆண்டும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவியருக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற விளையாட்டுக்களில் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் சிறு விளையாட்டரங்கங்களில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.2 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் 64 கல்வி மாவட்டங்களிலும் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மாணவ, மாணவியருக்கு விளையாட்டின் அடிப்படை திறமைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. 19,000–20,000

விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

**4.3 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் திட்டம்**

கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான 60 மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள், அனைத்து மாவட்டங்களிலும் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 4780 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

**4.4 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்**

தேசியப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன் தமிழக அணியில் பங்கு பெறுபவர்களுக்கு மாநில அளவிலான பயிற்சி முகாம் 7 முதல் 15 நாட்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.



**4.5 தினப்பயிற்சித் திட்டம்**

பயிற்றுநர்களின் பணியினை ஒருமுகப்படுத்தி வெற்றி வாய்ப்புக்கு தகுந்த பயிற்சியினை மேற்கொள்வதற்காக தினப்பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முதலாவதாக கன்னியாகுமரி, விருதுநகர், காஞ்சீபுரம், கோயம்புத்தூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் துவங்கப்படவுள்ளது. 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட 20 மாணவ, மாணவியரை தேர்ந்தெடுத்து அவர்களின் திறமையினை மேம்படுத்துவதற்கு இரண்டு விளையாட்டுக்களில் சிறந்த பயிற்சி வகுப்புகள், மாவட்ட விளையாட்டு வளாகங்களில் தினந்தோறும் காலை / மாலையில் நடத்தப்பட உள்ளது.

**4.6 வார இறுதி பயிற்சி முகாம்**

தற்சமயம் மாவட்டத் தலைமையிடங்களில் மட்டும் விளையாட்டுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தின் பிற பகுதியைச் சார்ந்த திறமை வாய்ந்த கிராமப்புற

விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு "வார இறுதி பயிற்சி முகாம்" முதற்கட்டமாக திருநெல்வேலி, மதுரை, கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் துவங்கப்பட உள்ளன.



## படலம்–5

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

### 5.1 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்க்க அனைத்து வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதத்திற்கு ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டுப் போட்டிகள் விளையாட்டு வீரர்கள் தங்களது திறமை மற்றும் செயல்திறனை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைகிறது. மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.2 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15–ம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக மாவட்ட

அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்திட ரூ.1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.3 இந்திய அரசின் ''பைக்கா'' (PYKKA) திட்டத்தின் கீழ் போட்டிகள் நடத்துதல்

இந்திய அரசின் “பைக்கா” திட்டத்தின் கீழ் கிராம ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தின் கீழ் 16 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவியர் மற்றும் மாணவரல்லாதோருக்கு விளையாட்டுப் போட்டிகள் கிராம ஒன்றிய அளவிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு மாநில அளவில் 20 விளையாட்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறுகின்றன. இப்போட்டிகளில்



வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கத் தொகை பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### 5.4 மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

மாநில விளையாட்டுக் கழகங்கள், மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளையும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகளையும், தேசிய போட்டிகளையும் நடத்தி வருகின்றன. தேசிய போட்டிகளை நடத்துவதற்காக ரூ.3 இலட்சம் மானியமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் சார்பில் தேசிய அளவிலான போட்டிகளில் அணிகளை பங்கேற்கச் செய்யும் மாநிலக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

### 5.5 தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துதல்

தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக்

கழகங்களுக்கு சர்வதேச மற்றும் ஆசிய அளவிலான போட்டிகள் நடத்த ரூ.50 இலட்சம் மான்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.6 "மாநில விளையாட்டுப் போட்டிகள்" ஊராட்சி ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் நடத்துதல்

கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டுகளில் பங்கேற்கும் வாய்ப்பினை அளிப்பது மற்றும் அவர்களிடையே 'விளையாட்டு போட்டி மனப்பான்மையை' மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கில் "மாநில விளையாட்டுப் போட்டிகள்" ஊராட்சி ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தடகளம், கூடைபந்து, கால்பந்து, வளைகோல் பந்து, கபாடி, நீச்சல் மற்றும் கையுந்து பந்து ஆகிய விளையாட்டுகளில் நடத்தப் படுகின்றன. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.80 இலட்சம்.



### 5.7 முதலமைச்சர் கோப்பைக்கான தடகளப் போட்டிகள்

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண்களுக்கு மாநில அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான தடகள போட்டிகள் 10 பிரிவுகளில் நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.1.00 இலட்சமும், இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூ.75,000/–மும் மற்றும் மூன்றாமிடம் பெறுவோருக்கு ரூ.25,000/–மும் வழங்கப்படும். மாநிலப் போட்டிகளுக்கு முன்னர் மாவட்ட அளவிலான போட்டிகளும் நடத்தப்படும்.

### 5.8 முதலமைச்சர் கோப்பைக்கான குழுப் போட்டிகள்

முதலமைச்சர் கோப்பைக்கான குழு விளையாட்டுப் போட்டிகள் கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்படும். இப்போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறந்த அணிகள் தேர்வு செய்யப்பட்டு மாநிலப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள். இப்போட்டிகளில் தங்கப்பதக்கம்,

வெள்ளிப்பதக்கம் மற்றும் வெண்கலப்பதக்கம் பெறும் அணிகளில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் ரூ.1 இலட்சம், ரூ.75,000 மற்றும் ரூ.25,000 பரிசுத் தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.4.02 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.9 <u>இந்திய அரசின் "பைக்கா" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் தேசிய போட்டிகளில் பங்கேற்பு</u>

இந்திய விளையாட்டுக் குழுமம், "பைக்கா" திட்டத்தின் கீழ் போட்டிகளை நடத்துகிறது. 2008–2009–ம் ஆண்டிலிருந்து கிராமங்களில் உள்ள 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு 20 விளையாட்டுகளில் பைக்கா திட்டத்தின் கீழ் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த பைக்கா திட்டத்தின் கீழ் பகுதி–5 போட்டிகள் 2012 பிப்ரவரி, 8 முதல் 11 வரை சென்னையில் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் 18 மாநிலங்களைச் சார்ந்த இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் குத்துச்சண்டை விளையாட்டுக்களில்,



800–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் அணி மேலாளர்களும் பங்கேற்றனர். இப்போட்டிகளில் தமிழ்நாடு இறகுப்பந்து மாணவ, மாணவியர் மற்றும் மேசைப்பந்து மாணவர் அணியினர் தங்கப்பதக்கமும், மேசைப்பந்து பெண்கள் அணியினர் வெள்ளிப்பதக்கமும், குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகள் 1 தங்கம், 6 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்தனர்.

"பைக்கா" போட்டிகளில் தமிழ்நாடு அணி 12 தங்கம், 15 வெள்ளி மற்றும் 16 வெண்கலப் பதக்கங்கள் பெற்று ஒட்டுமொத்த சேம்பியன்சிப் பிரிவில் தேசிய அளவில் இரண்டாம் இடத்தை பெற்றது.

### 5.10 <u>தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு</u>

இந்திய விளையாட்டுக் குழுமம், மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், வயது வரம்பின்றி 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி

வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று, வெற்றிப் பதக்கங்களை பெற்று வருகிறது.

**5.11 சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள்**

சென்னை ஓப்பன் டென்னிஸ் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 2 முதல் 8 வரை நடத்தப்பட்டது. இந்த டென்னிஸ் போட்டிகளின் தரம் சர்வதேச அளவில் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ரூ.1 கோடி மானியம் வழங்கி வருகிறது.

**5.12 சென்னை ஓப்பன் ஸ்குவாஷ் போட்டிகள்**

சென்னை ஓப்பன் சர்வதேச ஸ்குவாஷ் போட்டிகள் பிப்ரவரி, 2012–ல் சென்னையில் நடத்தப்பட்டது. இப்போட்டிகள் நடத்துவதற்கு தமிழக அரசு ரூ.1 கோடி அனுமதி அளித்து வழங்கியது.



**5.13 மாற்றுத் திறனாளிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

பிற விளையாட்டு வீரர்களைப் போன்று மாற்றுத் திறனாளிகள் போட்டிகளில் பங்கேற்று சாதனை புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு பிரிவினருக்கு நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மாநில அளவிலான தடகளப் போட்டிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. 1) உடல் ஊனமுற்றோர், 2) கண்பார்வையற்றோர், 3) மூளைவளர்ச்சி குன்றியோர் மற்றும் 4) காது கேளாதோர் ஆகியோர்களுக்கு போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**5.14 நடுநிலைப் பள்ளி மாணவர்களிடையே விளையாட்டினை அறிமுகம் செய்து வளர்த்தல்**

சிறு வயதிலேயே விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆர்வத்தை

தூண்டும் வகையில் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு (6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை) விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டு, பயிற்சி முகாம் மற்றும் போட்டிகள், ரூபாய் ஒரு கோடி செலவில் நடத்தப்படும்.

### 5.15 மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

கல்லூரி மாணவர்களிடையே ஆரோக்கியமான விளையாட்டு போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் உள்ள விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொள்ளும் வகையில் மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, உறாக்கி, கபாடி, மேசைப்பந்து, டென்னிஸ், நீச்சல் மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் ரூபாய் ஒரு கோடி செலவில் நடத்தப்படும்.



## படலம்–6

## உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

### 6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தேசிய அளவில் பதக்கம் பெறும் பள்ளி மாணவர்களுக்கு ரூ.10,000/–, கல்லூரி மாணவர்களுக்கு ரூ.13,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### 6.2 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

நலிந்த நிலையிலுள்ள முன்னாள் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.6000/–க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக

மாதமொன்றுக்கு ரூ.3000/– வீதம், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

**6.3 விளையாட்டு வீரர்கள் நல நிதி**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**6.4 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்**

தற்போது காவல்துறையில் விளையாட்டு வீரர்களுக்கான 5 சதவிகித இட ஒதுக்கீடு முறை நடைமுறையில் இருக்கிறது. பொறியியல் படிப்பிற்கான சேர்க்கையில், விளையாட்டுச் சாதனையாளர்களுக்கு 100 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**6.5 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும்



உடற்கல்வி ஆசிரியர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும், பாராட்டுப் பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

**6.6 உயர் ஊக்கத் தொகை**

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| வ எண் | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | <u>ஒலிம்பிக்</u> ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 200 | 100 | 50 |
| 2 | <u>ஆசிய விளையாட்டுப் போட்டிகள்</u> (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 50 | 30 | 20 |
| 3 | <u>காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்</u> (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 50 | 30 | 20 |



| | | | | |
|---|---|---|---|---|
| 4 | தெற்காசிய விளையாட்டு போட்டிகள் (2 ஆண்டுக்கு ஒரு முறை ) (ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்) | 5 | 3 | 2 |
| 5 | தேசிய விளையாட்டு போட்டிகள் (2 ஆண்டுக்கு ஒரு முறை ) (ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்) | 5 | 3 | 2 |

மேலும் அரசாணை (நிலை) எண்.30, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் **03–06–2008–ன்படி** ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளான சதுரங்கம், கேரம், வளைபந்து (Tennikoit) மற்றும் வலுதூக்கல் (Powerlifting) ஆகியவற்றில் உலகப் போட்டிகள் மற்றும் தேசியப் போட்டிகளில் பதக்கம்

வெல்லுபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது:-

| இனம் | விளையாட்டுகளின் வரிசைக் கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் உலகப் போட்டிகள் | ரூ.20 இலட்சம் | ரூ.15 இலட்சம் | ரூ.10 இலட்சம் |
| 2. | சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் தேசிய போட்டிகள் | ரூ.1 இலட்சம் | ரூ.50,000/– | ரூ.25,000/– |

### 6.7 திறமை வாய்ந்த இளம் சிறார்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்

உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் கண்டறியப்படும் 3240 திறன் வாய்ந்த இளம் சிறார்களுக்கு சிறப்பு பரிசுத் தொகையாக வருடத்திற்கு ரூ.6000/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.1.94 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



### 6.8 குடியரசுதின மற்றும் பாரதியார்தின விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை உயர்த்தி வழங்குதல்

மாநில அளவில் நடத்தப்படும் குடியரசுதின மற்றும் பாரதியார்தின விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுத் தொகை ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.29.86 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.1200/–, இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூ.800/– மற்றும் மூன்றாமிடம் பெறுவோருக்கு ரூ.400/– வழங்கப்படுகிறது.

### 6.9 உயர்நிலை விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை தயார் செய்ய ஒரு சிறப்புத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதன்படி 5 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவர்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் (முக்கியமாக

ஒலிம்பிக் போட்டிகளில்) பதக்கம் பெற தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் வெளிநாடுகளில் போட்டிகளில் பங்கேற்கவும், விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும், உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சி கருவிகள் வாங்கிடவும், சத்தான உணவு பெற்றிடவும், விளையாட்டு வீரர்களின் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் வகை செய்யும்.

**6.10 <u>விளையாட்டு வீரர்களுக்கு கருணை மதிப்பெண்கள் வழங்குதல்</u>**

பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர், விளையாட்டில் அவர்கள் பெற்ற சாதனைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு சாதனையின் அடிப்படையில் கருணை மதிப்பெண்கள் வழங்கப்படும்.



## <u>படலம் – 7</u>

## <u>தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம்</u>

**7.1** உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வந்த தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், அரசாணை எண்.18, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 7.3.2012–ன் படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நிர்வாகத்தின் கீழ் மாற்றம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பல்கலைக்கழகத்தில் உள்ள நிபுணத்துவம் மற்றும் வசதிகள் தமிழக விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

## படலம் – 8

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 8.1 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.



தற்சமயம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் சென்னை, மதுரை, தஞ்சாவூர், உதகமண்டலம் மற்றும் திருச்சி ஆகிய 5 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

### 8.2 இளைஞர் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு நிதி உதவி அளித்தல்

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடவும், சிறுதொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய கட்டுமான பணிகளில் பங்குக் கொள்ளவும் 1) தொழிற்கல்வி திட்டம்; 2) தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்; மற்றும் 3) கண்காட்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற் கொள்ளவும், இளைஞர்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால

அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15–35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப பயிலகங்கள், பல்கலைக் கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான நேரு யுவகேந்திரா மூலமாக அனுப்பப்படும் கருத்துருக்கள் மீது மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பெறப்பட்டு, அவை மைய அரசுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு, அனுப்பி வைக்கப்படுகின்றன.



## படலம்–9

## தேசிய மாணவர் படை – தமிழ்நாடு

1. **தொடக்கம்:**

தேசிய மாணவர் படை சட்டத்தின் (எண் XXXI, 1948) கீழ், தேசிய மாணவர் படையானது இராணுவ அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 16 ஜுலை 1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

2. **குறிக்கோள்கள்**

(அ) நற்பண்பு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமைப் பண்பு, சமய சார்பற்ற நோக்கம் துணிவுசெயலார்வம், மற்றும் உன்னதமான சுயநலமில்லாத தொண்டின் குறிக்கோள்களை இளைஞர்களிடையே வளர்த்தல்.

(ஆ) மனிதவள மேம்பாட்டை முறையாக இளைஞர்கட்கு பயிற்றுவித்து, ஊக்குவித்து தலைமைப் பண்பை அன்றாட வாழ்வில் பெற்று, அவர்களை நாட்டுப் பணிக்காக எப்போதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயதப்படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. <u>நிர்வாகம்</u> :

தேசிய மாணவர் படையானது இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை இயக்கத்தின் நிர்வாகத்தினை திறம்பட செயல்படுத்துவதற்காக மாநில அரசு தேசிய மாணவர் படை துணைத் தலைமை இயக்குநர் அவர்களுக்கு "**துறைத் தலைமை அதிகாரங்களை**" அளித்துள்ளது.

4. <u>நிதி ஒதுக்கீடு:</u>

தமிழக அரசு 2012–2013 ஆண்டிற்காக, தேசிய மாணவர் படைத்துறைக்கு ரூ.3,510.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

5. <u>ஊக்க ஊதியங்கள்:</u>

தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தமிழக அரசு கீழ்கானும் ஊக்க ஊதியங்களை வழங்குகின்றது.

(அ) தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களுக்கான தமிழக அரசு ஊக்கத்தொகையினை 100 முதுநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் பத்து மாதங்களுக்கும், 100 இளநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் பத்து மாதங்களுக்கும் மொத்தம் ரூ.3,00,000/–ஐ உதவித் தொகையாக வழங்குகின்றது.

(ஆ) குடியரசு தின விழா முகாம் மற்றும் அதைச்சார்ந்த முகாமில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ரொக்க ஊக்க ஊதியமாக ஒராண்டிற்கு ரூ.3.17 இலட்சம் வழங்குகின்றது.

(இ) தமிழ்நாட்டில் இளநிலை ஆசிரியர் மற்றும் முதுகலை பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களுக்கான தேர்வு நியமன வாய்மொழித் தேர்வில், 12 மொத்த மதிப்பெண்களில் 1/2 மதிப்பெண் தேசிய மாணவர் படைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>மாணவர்கள் எண்ணிக்கை</u>

தமிழ்நாடு தேசிய மாணவர்படை மாணவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| | |
|---|---|
| இளநிலைப்பிரிவு மாணவர்கள் (பள்ளி மாணவர்கள்) | – 66,230 |
| இளநிலைப்பிரிவு மாணவிகள் (பள்ளி மாணவிகள்) | – 5,450 |
| முதுநிலைப்பிரிவு மாணவர்கள் (கல்லூரி மாணவர்கள்) | – 21,923 |
| முதுநிலைப்பிரிவு மாணவிகள் (கல்லூரி மாணவிகள்) | – 5,187 |
| மொத்தம் | – 98,790 |

<u>படலம் –10</u>

## நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் தமிழகத்தில் செப்டம்பர், 1969 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 3,70,018 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் கல்வி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இதற்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்குகின்றன. தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

2010–11 ஆம் நிதியாண்டில், தொடர் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 160/–லிருந்து ரூ. 250/– ஆகவும், சிறப்பு முகாம் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 300/–லிருந்து ரூ. 450/–ஆகவும் மைய அரசு மானியத்தை உயர்த்தியுள்ளது. இதன் விளைவாக, 2012–13ஆம் நிதி ஆண்டில் பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்ககங்களுக்கு மொத்தம் ரூ.12,96,83,550/–ம்,



பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.4,60,75,000/–ம் மான்யம் விடுவிக்க வேண்டியுள்ளது. நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவத் தொண்டர்களிடம் ஆளுமைத் திறன் வளர்த்தல் ஆகும்.

இதன் அடிப்படையில் கீழ்கண்ட செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன:

தலைமைப் பண்பு வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு மற்றும் சாலை விதிகளை மதித்தல், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்தல். குருதிக் கொடை, குருதி வகைப்படுத்தல், குருதிக் கொடையாளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆகிய செயல்பாடுகள் தேவைக்கேற்றபடி நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழுநோய் கண்டறிதல், கண், பல், மார்பகப் புற்றுநோய் ஒழிப்பு, இதயநோய், தாய்சிசு நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இளைஞர்களிடையே சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு, பாதுகாப்பான போக்குவரத்து முறைகளையும், முதலுதவி மற்றும் "காவல்துறை எனது நண்பன்" போன்ற முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. ஓசோன் படலத்தைப் பாதுகாத்திட, பொது மக்களின் துயரை குறைத்திட, சமுதாய வனத்திட்டங்கள், மாதிரி வனச்சரகம், பசுமை எல்லை மரக்கன்று நடுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் பாலித்தீன் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைத் தோற்றுவித்தல், மழை பெறுவதற்கு வனங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் போன்ற விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு முகாம்களின்போது, மாணவர்கள் கிராமத்திலுள்ள இளைஞர்களுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பிடம், தண்ணீர் தொட்டிகள், சமூகக் கூடங்கள், சுற்றுச்சுவர் கட்டுதல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், சாலை அமைத்தல் மற்றும் மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர்.



**<u>நாட்டு நலப்பணித் திட்டம் மூலமாக நிறைவேற்றப்பட்ட சாதனைகள் :–</u>**

1. நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் **<u>80,950</u>** யூனிட் இரத்தத்தை இலவசமாக வழங்கியுள்ளார்கள்.
2. **<u>4,90,500</u>** மரக் கன்றுகளை நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் நட்டுள்ளனர்.
3. எழுத்தறிவில்லாத **<u>95,000</u>** நபர்களுக்கு நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் எழுத்தறிவு அளித்துள்ளார்கள்.
4. மாணவத் தொண்டர்களின் பல்வேறு செயல்பாடுகளால் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உருவாக்கப்பட்ட உத்தேச சொத்தின் மதிப்பு **<u>ரூ. 6,57,00,000/-.</u>**
5. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை **<u>4,22,000.</u>**

6. இது மட்டுமின்றி சிறப்பு முகாம்களின்போது, நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள், அரசு அவ்வப்போது அறிவிக்கும் நலத் திட்டங்கள், மக்களைச் சென்றடையும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகவும் நாடகங்கள் மூலமாகவும் விளக்குகின்றனர்.

**என்.ஆர்.சிவபதி,**
**பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்**
**இளைஞர்நலத் துறை அமைச்சர்.**